Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 330

வியாழக்கிழமை
23 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## 13 நாள் சிசு கேணியாவால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23
13 நாள்களேயான ஆண் சிசு ஒன்று கேணியா காரணமாக உயிரிழந்துள்ளது. பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிசு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 11

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் தொடர்கிறது தாமதம்



**கொழும்பு, ஒக்ரோபர் 23**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதிர் வரும் 28ஆம் திகதி இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. நவம்பர் முதல்வாரத்தில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.** 11

## வெலிகம சபைத் தவிசாளர் சபைக்குள் சுட்டுக்கொலை

### பட்டப்பகலில் நடந்த சம்பவம்



கொழும்பு, ஒக்.23
மாத்தறை, வெலிகம பிரதேசசபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர பிரதேசசபைக்குள், தவிசாளர் ஆசனத்தில் வைத்து நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரான 37 வயதான லசந்த விக்ரமசேகர, மிதிகல சாலா என்றும் 11

## தவிசாளர் மீது துப்பாக்கிச்சூடு 4 பொலிஸ் குழுக்கள் களத்தில்

கொழும்பு, ஒக்.23
வெலிகம பிரதேசசபைத் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக 4 விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக 11

மருந்துப் பற்றாக்குறைக்கு உடன் தீர்வுகாணுங்கள்!
விரிவு பக்கம்:- 05



## கட்டுப்பாடு இழந்தது பஸ் முருங்கன் இளைஞன் பலி

வவுனியா, ஒக்.23
கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பயணித்த தனியார் சொகுசு பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியதில் மன்னார், முருங்கனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்தில் பலர் காயங் 11

## நுரையீரல் தொற்றால் 7 வயதுச்சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.23
வலிப்பு மற்றும் நுரையீரல் தொற்றுக்காரணமாக 7 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்த ச.றிகானா (வயது-7) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன் தினம் இரவு 11

## வெலிகம துப்பாக்கிச் சூடு மிகப்பாரதூரமான விடயம்

### எதிர்க்கட்சித் தலைவர் கொதிப்பு

கொழும்பு, ஒக்.23
வெலிகம பிரதேசசபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயம். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு என்ன நடந்துள்ளது? என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார். 11



## போதைமாத்திரையோடு யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.23
போதைமாத்திரை விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும், போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் 11

## வெலிகம சபையின் தவிசாளர் பாதாள உலகத்தொடர்புள்ளவர்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23
துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த வெலிகம பிரதேசசபைத் தலைவர், பாதாளக்குழுவுடன் தொடர்புபட்டவர். பாதாளக்குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
வெலிகம பிரதேச சபைக் 11

### முச்சந்தி முரளி

'சுட்ட உடனேயே அவருக்கு பாதாளக்கும்பல் எண்டு பட்டம் குடுக்கினம் எண்டு சொல்றதுதான் பெரிய டவுட்டாக் கிடக்குது'

## வன்முறையைத் தூண்டும் வகையில் பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர்

### சுற்றிவளைத்துத் தேடும் யாழ்ப்பாணப் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் இளைஞர்களை ஒன்றுகூட்டி, வன்முறையைத் தூண்டும் வகையில் தனது பிறந்தநாளைக் கொண்டாடிய இளைஞர் ஒருவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இளைஞனின் வீடு நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. 11



### 'ரீவியை' இயக்க முயன்ற

## மாற்றுத்திறனாளி மின்தாக்கி மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.23
தொலைக்காட்சியை இயக்குவதற்காக வாயால் 'பிளக்கை' பொருத்திய மாற்றுத்திறனாளி ஒருவர் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், நாவந்துறையில் நடந்துள்ளது. பு.தேவபாலன் (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4232 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 02 32 55 61 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1299 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 20 30 36 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0258 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 7 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2338 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 10 23 39 58 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5990 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 2 9 8 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2020 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 06 26 32 66 |
| விசேட எழுத்து | K |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0565 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 8 5 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0106 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 44 57 |

# நாடளாவிய ரீதியில் 36,178 ஆசிரியர் வெற்றிடங்கள்



*கல்வியமைச்சர் தகவல்*

**கொழும்பு, ஒக்.23**

**நாடு முழுவதும் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் 36 ஆயிரத்து ,178 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மாகாணத்தில் 4,630, தென் மாகாணத்தில் 2,513, மத்திய மாகாணத்தில் 6,318, வடமேல் மாகாணத்தில் 2,990, ஊவா மாகாணத்தில் 2,780, வடமத்திய மாகாணத்தில் 1,568, கிழக்கு மாகாணத்தில் 6,613, சப்ரகமுவ மாகாணத்தில் 3,994 மற்றும் வடக்கு மாகாணத்தில் 3,271 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதற்காக, நாடுமுழுவதும் உள்ள தேசியப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பப் பாடங்கள், வெளிநாட்டு மொழிகள் மற்றும் 13 ஆண்டு தொடர்ச்சியான பாடங்களுடன், க.பொ.த உயர்தர சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி மூல வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது.

ஆசிரியர் சேவையின் தரம் 3 (ஆ) 1 தரத்தைச் சேர்ந்த பொறுப்பேற்காத 353 பட்டதாரிகளை அடுத்த 2 மாதங்களுக்குள் ஆட்சேர்ப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஆசிரியர் சேவையில் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்ப நிறுவப்பட்ட ஆட்சேர்ப்பு மறுஆய்வுக்குழுவிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த வெற்றிடங்களை விரைவில் நிரப்ப தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0698 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 0 0 9 8 3 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2964 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 28 42 52 57 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 04 54 57 59 |
| வெற்றி வாரம் | 5025 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| விருச்சிகம் | ♏ |
| வெற்றி இலக்கம் | 25 29 31 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4676 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 05 64 71 73 |
| வெற்றி வாரம் | 2140 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 46 47 64 69 |
| வெற்றி வாரம் | 2790 |

| JAYODA DLB | |
|---|---|
| திகதி | 22.10.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 19 20 29 67 |
| வெற்றி வாரம் | 2172 |

## மாகாணசபைத் தேர்தல் வாக்குறுதி மீறப்பட்டது

*ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக்.23

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீறிவிட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஒருவருட காலப்பகுதிக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தி வழங்கி இருந்தது.

எனினும், ஒரு வருடம் கடந்தும் தேர்தல் நடத்தப்படவில்லை. இதன்மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி மீறப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசாங்கத்துக்குப் பின்னடைவு ஏற்பட்டது. எனவே, தோல்விப் பயத்துக்கு அஞ்சியே இவ்வாறு இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



## வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக சாம்பசிவம் சுதர்சன் நியமனம்!

யாழ்ப்பாணம், ஒக்.23

வடக்கு மாகாண புதிய உள்ளூராட்சி ஆணையாளராக சாம்பசிவம் சுதர்சன் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நேற்றுப் புதன்கிழமை வழங்கிவைத்தார்.

சாம்பசிவம் சுதர்சன் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளராக முன்னர் கடமையாற்றியிருந்தார். இதேவேளை, இதுவரை காலமும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகத் திருமதி. தேவந்தினி பாபு கடமையாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66,9,159)

## ஆசிரியர் இடமாற்றத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கு வழங்கப்பட்ட ஆசிரிய இடமாற்றத்துக்கு நீதிமன்றால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய ஆசிரியரொருவருக்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தால் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்ற கட்டளைக்கு, இடைக்கால தடைவிதிக்குமாறுகோரியும், குறித்த இடமாற்றல் கடிதத்தை இரத்துச் செய்யுமாறுகோரியும் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனால் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் முன்வைத்த சமர்ப்பணங்களின் அடிப்படையில், குறித்த ஆசிரியருக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இடைநிறுத்தும் இடைக்காலத் தடையுத்தரவு நீதிபதி ரி.அலெக்ஸ் ராஜாவால் பிறப்பிக்கப்பட்டது. அடுத்த வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (க-113,66)

## ஹரக் கட்டாவின் பாதுகாப்பு மாதத்தில் ஒரு கோடி செலவு



கொழும்பு,ஒக்.23

பாதாள உலகத் தலைவரான ஹரக் கட்டா என்றும் அழைக்கப்படும் நதுன் சிந்தகவின், பாதுகாப்புச் செலவுக்காக மாதந்தோறும் ஒரு கோடிக்கும் அதிக பணம் செலவிடப்படுவதாக அவரது சட்டத்தரணி உந்துல் பிரேமரத்ன கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஹரக் கட்டா தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

வரலாற்றில் எந்த சந்தேக நபரும் இவ்வளவு நீண்டகாலம் காவலில் இருந்ததில்லை. அவருக்காக 87 அதிகாரிகள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

அவரைத் தடுத்துவைக்க மாதந்தோறும் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பொது வரிப்பணம் செலவிடப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தொழில்நுட்பம் செம்மணிக்குப் பெறப்படும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெறப்படும். ஏனெனில் உண்மையைக் கண்டறிவதற்கு இது முக்கியமானது என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணிப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமக்குச் சில விடயங்களில் ஆய்வுக்கூட வசதி இல்லை. எமது நாட்டுப்பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். எமக்கு உண்மையைக் கண்டறிவதே பிரதானம். அதற்குத் தொழில்நுட்ப உதவி தேவைப்படுகின்றது. எனவே, சர்வதேச தொழில்நுட்ப உதவி பெறப்படும் - என்றார். (ச-44)

# 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.23

இலங்கையில் 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் விடுக்கப்பட்டுள்ளது. பதுளை, கொழும்பு, காலி, கண்டி, களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடக்குக் கடற்கரைக்கு அருகில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்தத் தாழ்வுப் பகுதி மேலும் வளர்ச்சியடைந்து வடமேற்கு நோக்கி நகரும் என்று எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ச-இ)




# தங்கம் விலை தளர்வு

கொழும்பு,ஒக்.23

தொடர்ச்சியாக அதிகரிப்பை பதிவுசெய்த தங்கத்தின் விலை நேற்றுப் புதன்கிழமை குறைவடைந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 410,000 ரூபாவாக இருந்த 24 கரட் தங்கத்தின் விலை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகக் குறைவடைந்துள்ளதாக சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நாட்டில் தங்கத்தின் விலை 60 ஆயிரம் ரூபாவாகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# ஊடகர் நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

நிமலராஜன் போர்ச்சூழலில் யாழிலிருந்து துணிச்சல் மிகு ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்தார். துப்பாக்கிதாரிகளால் நிமலராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டபோது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரைமீது வீழ்ந்தே உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,27)

# இறக்குமதி அரிசிக்கு விலை நிர்ணயம்!

கொழும்பு, ஒக்.23

இறக்குமதி செய்யப்பட்ட அரிசிவகைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலைகளை நிர்ணயித்து நுகர்வோர் விவகார அதிகாரசபையால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை ஒரு கிலோகிராம் 210 ரூபாவாகவும், நாடு அரிசி ஒரு கிலோகிராம் 220 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 230 ரூபாவாகவும், பொன்னி சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 240 ரூபாவாகவும் மற்றும் கீரி பொன்னி அல்லது பால் பொன்னி அரிசி ஒரு கிலோகிராம் 255 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)




## மாராட்ட ஊசி

பதறாதகாரியம் சிதறாது எண்டு சொல்லுவினம். பதற்றம் தான் கனக்கப் பிழையளுக்கு காரணம். இப்பத்தை அவசர உலகத்தில ஒருத்தரும் ஆய்ஞ்சறிஞ்சு வேலை செய்யிறேலை. எவ்வளவு வேளைக்கு வேலையளை முடிக்க ஏலும் எண்டுதான் பாக்கினமே தவிர, அந்த வேலை சரியா நடந்திதோ எண்டும் பாக்கமாட்டினம். உந்த அவசரத்தனத்தால வேற வேலையளில பிழை நடந்தாலும் கூட ஏதோ அதைச் சரிசெய்ய வழி தேடலாம் ஆனால் உயிர்காக்கிற மருத்துவத்தில ஒரு சின்னப்பிழை நடந்தால் கூட உயிர் போகும். அப்பிடி நுணுக்கமா, எப்பவும் அவதானமா கண்ணுக்க எண்ணெய் விட்டுக் கொண்டிருக்கவேண்டிய மருத்துவத்தொழிலை சிலர் ஏனோதானோவெண்டு செய்யிறதால தான் அடிக்கடி 'மருத்துவத்தவறு' எண்டு சொல்லி பாரதூரமான சம்பவமெல்லாம் நடக்குது.

ரண்டு மூண்டு நாளைக்கு முதல் பரந்தன் சந்திக்கு கிட்ட ஒரு அக்சிடெண்ட். அதில ரண்டுபேருக்கு காயம். உடனேயே கிளிநொச்சி ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கினம். நல்லகாலமா ரண்டுபேருக்கும் பாரதூரமான காயமொண்டுமில்லை. எண்டாலும் ஒராளுக்கு மூச்செடுக்க கஷ்டமா இருந்திருக்குது. உட்காயம் ஏதும் வந்திருக்குமோ எண்ட பயத்தில் அவரை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கினம். அவரை இஞ்ச முதலில 24 ஆம் வார்ட்டில விட்டுட்டு, பிறகு அப்பிடியே 28 ஆம் வார்ட்டுக்கு மாத்திட்டினம். அந்த வார்ட்டில சேர்த்த கொஞ்சநேரத்தில அவற்றை பேரை நேர்ஸ் கூப்பிட்டிருக்கிறா. உடன இவரும் கட்டிலில இருந்து எழும்பிப்போக, அந்த நேர்ஸும் இவருக்கு ஒரு ஊசியைப் போட்டிருக்கிறா. அப்பிடி ஊசி போட்ட கொஞ்சநேரத்தில இன்னொரு நேர்ஸ் வந்து, அவாவும் இவரின்ர பேரைக் கூப்பிடுறா. அதுக்கு இந்தப்பெடியன் போய், "இப்பதானே இன்னொரு நேர்ஸ் வந்து ஊசி போட்டிட்டு போனவா. அதுக்குள்ள திரும்ப வந்து கூப்பிடுறீங்களே?" எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அவா " உமக்கு ஆர் ஊசி போட்டது? உமக்கு ஒரு ஊசியும் போடத் தேவையில்லை, இந்தக் குளிசைதான் உமக்கு" எண்டு சொல்ல, இந்தப் பெடியனுக்கு ஈரக்குலையே நடுங்கிட்டுது. பிறகு ஊசிபோட்ட நேர்ஸை கூப்பிட்டு விசாரிக்கத்தான் , ஒரு உண்மை தெரிய வந்திருக்கு.

அக்சிடெண்டில காயப்பட்டு போன அந்தப் பெடியன்ர பேரில, இன்னொரு பெடியனும் அந்த வார்ட்டில இருந்திருக்கிறார். முதலெழுத்து (இனிசியல்) மட்டும் தான் வேற வேற. இந்த பெயர்க்குழப்பத்திலதான் ஆள் மாறி ஊசியைப் போட்டிருக்கினம். "இந்த ஊசியால ஒரு பாதிப்பும் வராது" எண்டு அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்குத்தர் சொன்னாலும் கூட, அந்த ஊசியில என்ன மருந்தை ஏத்தினவை எண்டு மூச்சும் விடேலை. அதோட "உங்கட மகனுக்கு ஒரு பிரச்சினையுமில்லை,. அவரை துண்டுவெட்டி, வீட்டை கூட்டிக்கொண்டு போகலாம்" எண்டும் சொல்லியிருக்கினம். ஆனால் அந்தப் பெடியன்ர வீட்டுக்காரர் அதுக்குச் சம்மதிக்கேலை. " நீங்கள் போட்ட ஊசியால என்னவும் நடந்தால் ஆர் பொறுப்பு? அதுக்கும் அவர் நாலைஞ்சு நாள் இஞ்ச இருந்து ஒரு பிரச்சினையும் இல்லையெண்டால் மட்டும் துண்டை வெட்டி கூட்டிக் கொண்டுபோறம்" எண்டு சொல்லியிருக்கினம் . அந்தப் பெடியன் இன்னும் 28 ஆம் வார்ட்டிலதான் இருக்கிறாராம். ஒருவேளை வேற ஏதும் பாரதூரமான ஊசியை இப்பிடி பெயர்க்குழப்பத்தில ஆள்மாறி போட்டு, ஏதும் நடக்கக்கூடாது நடந்தால் ஆர் பொறுப்பு? இனியாவது கொஞ்சம் இந்த விசயங்களில உரியவை அக்கறை காட்டுவினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச்செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. தாய்மாமன்மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதரவகையில் எதிர் பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரி களால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உறவினர் களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரிய வர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** மகிழ்ச்சிதரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் வீண்செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங் களில் அனுகூலம் உண்டாகும். கணவன்–மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம்தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். சகோ தரர்கள் உதவிகேட்டு வருவார்கள். சிலருக்குப் பிள்ளைகள்மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். மற்றவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ள வும். செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை யைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு மற்றவர் களுடன் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுச ரித்துச்செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும். புதிய நண்பர்களின் அறி முகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக் கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மகரம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார் கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக்காரியம் அனுகூலமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடமுடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்குவந்து மகிழ்ச்சிதரும். சிலருக்குத் தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணை யாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச்செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டுநீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டி யிருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்றுச் சோர்வு உண்டாகும்.



## சர்வதேசக் கூட்டுறவு தினவிழா

யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சாவகச்சேரிப் பிராந்தியசபையின் ஏற்பாட்டில் 103ஆவது சர்வதேசக் கூட்டுறவு தினவிழா சாவகச்சேரிப் பிராந்திய சபைத் தலைவர் ஞா.சகுந்தலாதேவி தலைமையில் சாவகச்சேரிப் பலநக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, கூட்டுறவுதினப் போட்டிகளில் நடுவராகக் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் செ.சுப்பிரமணியம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் இ.இராசகுலன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கூட்டுறவுச் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் பதக்கம் அணிவித்து நினைவுப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கூட்டுறவு தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசத் தலைவர் திருமதி ச.பரமானந்தன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.நிமலறூபன், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கு.ஜனகன், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாச செயலாளர் திருமதி பு.தயாளினி, சி.க.கூ.சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-25,159)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.23

'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி விரதஉற்சவம் நேற்றுப் புதன்கிழமை உஷக்காலப் பூஜையுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து ஆறு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக கந்தசஷ்டி உற்சவம் நடைபெறும்.

விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்கள் தங்கள் பெயர், விபரங்களைக் காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ள முடியுமென மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் அறிவித்துள்ளார். (ச-41-66)

## கசிப்புடன் ஒருவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் 21 போத்தல்கள் கசிப்புடன் நேற்றுமுன்தினம் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணப் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)


## கந்தசஷ்டி உற்சவகாலத்தில் நல்லூரில் வீதித்தடைகள்

யாழ்ப்பாணம், ஒக்.23

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி உற்சவகாலத்தை முன்னிட்டு நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைவரை வழமைபோல தற்காலிகமாக வீதிகள் தடைசெய்யப்படவுள்ளன.

அத்துடன் நேற்றுத் தொடக்கம் நாளை மறுதினம் 25ஆம் திகதி வரை மற்றும் 28 ஆம் திகதி பி.ப. 5 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வீதித்தடை போடப்படும்.

அத்துடன் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சூரன்போர் அன்று நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையும் வீதித் தடைசெய்யப்படும். இதன்போது பொதுமக்கள் மாற்றுப்பாதை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறு யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது. (ச-25)





நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி உற்சவம் நேற்றுப்புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-25, 17)

## எழுதுமட்டுவாழில் முதியோர் தினவிழா

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு எழுதுமட்டுவாழ் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், முதியோர் தினவிழா எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் சீ. சத்தியசோதி கலந்துகொள்வார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## நீதியென்பது யாவருக்கும் பொருத்தமே!

இலங்கையின் இறுதிப்போரில்நடந்த போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. வரை பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், இந்தப் போர்க்குற்றங்களுக்கு சற்றும் சளைக்காத அட்டூழியங்களையும், படுகொலைகளையும் புரிந்த - இந்திய அமைதிகாக்கும் படையினரால் தமிழர் தாயகத்தில் நிகழ்த்தப்பட்ட - கறைபடிந்த பக்கங்கள் இன்னும் மௌனத்தின் அடியிலே புதைந்து கிடக்கின்றன. உண்மையான நீதி தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திற்கோ, தேர்ந்தெடுக்கப்பட்ட குற்றவாளிகளுக்கோ மட்டும் வழங்கப்படும் ஒன்றாக இருக்கக் கூடாது. நீதி முழுமைபெற வேண்டுமானால், எல்லாத் தரப்பினரின் குற்றங்களும் வெளிச்சத்துக்கு வர வேண்டும். இந்தியா வல்லரசு என்பதாலோ என்னவோ, அதன் படைகள் தமிழர்களின் தாயகத்தில் நடத்திய மனித வேள்விகள் வெளியுலகுக்குக் கொண்டுவரப் படாமலே உள்ளன. 1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை இந்தியப்படைகள் இலங்கையில் -வடக்கு - கிழக்கில் - நிலைகொண்டிருந்த போது புரிந்த போர்க் குற்றங்களே, இறுதிப்போரில் இலங்கைப் படைகளும் போர்க்குற்றங்களைச் செய்வதற்கு முன்னோடியாக இருந்தன என்பதில் மாற்றுக்கருத்தேதும் இல்லை.

கொக்குவில் பிரம்படிப் படுகொலை, வல்வைப் படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை என நீளும் இந்தியப்படைகளின் வெறியாட்டத்தின் உச்சமே யாழ்.போதனா மருத்துவமனைப் படுகொலைகள். உலகில் எந்தவொரு இராணுவமும் செய்யத் தயங்குகின்ற போர்க்குற்றத்தை எவ்வித கூச்சமும் இல்லாமல் இந்தியப்படைகள் செய்துமுடித்திருந்தன. போர் நடக்கும் இடங்களில் மருத்துவமனைகளை எந்தவொரு ஆயுதத்தரப்பும் தாக்குவதில்லை. அதுவும் செஞ்சிலுவைச் சின்னத்தை மேற்கூரையில் மிகப் பெரிதாகப் பொறித்திருந்த - போர் தவிர்ப்பு வலயம் என ஏற்றுக் கொள்ளப்பட்ட- போர்மேகம் கவிழ்ந்த சூழலிலும் மக்களின் உயிர்காக்கும் உன்னதப்பணியை செய்து கொண்டிருந்த - யாழ்.போதனா மருத்துவமனைக்குள் இந்தியப் படைகள் நுழைவதற்கு எந்த முகாந்திரமும் இருக்கவில்லை. வெறிபிடித்த வேட் டைநாய்களாக, நோயாளிகளையும், மருத்துவர்களையும், தாதியர்களையும் ஏன் இந்தியப்படைகள் சுட்டுப்படுகொலை செய்தன என்பது இதுவரை எவருக்கும் தெரியாத மர்மமே. எனவே மனிதகுலத்துக்கு விரோதமான இத்தகைய படுகொலைகள் குறித்தும் உரிய விசாரணைகள் நடத்தப்படுவதன் மூலமே, அவ் வாறான துர்நிகழ்வுகள் மீளநிகழாமையை உறுதிப் படுத்தமுடியும்.

இந்தியப்படையினர் செய்த படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை, பழிவாங்கும் உணர்வில் எழவில்லை. மாறாக உண்மையை அறிந்து, அதிலிருந்து கற்றுக்கொண்டு, மீண்டும் அத்தகைய அநீதிகள் நடைபெறாத சமுதாயத்தை உருவாக்கும் நோக்கிலேயே விடுக்கப்படுகின்றது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இந்தியப்படைகளால் புதைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் எலும்புகளும், யாழ்ப்பாணம் மருத்துவமனை மண்டபத்தில் காயங்களுடன் விழுந்த மருத்துவர்களும், வல்வெட்டித் துறையிலே சுட்டும் எரித்தும் கொல்லப்பட்டவர்களும், கொக்குவில் பிரம்படியில் கவசவாகனங்களை உடலில் ஏற்றிக்கொல்லப்பட்டவர்களும் தமக்கும் நீதி கிட்டாதா என்று ஏங்கிக்கொண்டிருப்பார்கள்.

நியாயம் மௌனமாயிருக்கும்போது சமாதானம் பொய்யாகி விடும். நம் சமூகத்தில் நீதி நிலைநிற்ற வேண்டுமானால், அநீதியின் ஒவ்வொரு பக்கங்களும் திறந்து வாசிக்கப்பட வேண்டும். அது இந்தியாவாக இருந்தாலும், இலங்கை அரசாங்கமாக இருந்தாலும், பொறுப்புக்கூறலென்பது ஒரேவகைப்பட்டதே. உண்மையின் வெளிப்பாடு ஒரு நாட்டின் பலவீனமல்ல, அதன் நெறிமுறையின் வலிமை.புதைக்கப்பட்ட உண்மையையும் வெளிக்கொணரும் துணிச்சலாக அது அமையட்டும். அதுவே மனிதநேயத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் வழிவகுக்கும் உண்மையான பாதையாகும்.



நாளொரு நல்வார்த்தை

உங்களை அதிகமாக சிந்திக்க வைக்கிற புத்தகங்களே உங்களுக்குப் பயனுள்ளவை.

– பார்க்கர் –






## மருந்துப் பற்றாக்குறைக்கு உடன் தீர்வுகாணுங்கள்!

கொழும்பு,ஒக்.23

**அரச மருத்துவமனைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின்கீழான வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதி மீதான விவாதத்தின்போது, அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மருத்துவமனைகளில் மருந்துப் பற்றாக்குறை பெரும் பிரச்சினை யாக மாறியுள்ளது. இலவசச் சுகாதார சேவையை மாத்திரம் நம்பியுள்ள பெரும்பாலான மக்கள் இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இலவச கல்வி மற்றும் இலவசச் சுகாதாரம் நடுத்தர மக்களுக்கு அத்தியாவசியமானது. அரச மருத்துவமனைகளில் மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. மருந்துக் கொள்வனவில் காணப்படும் தாமதம் மற்றும் முறைகேடுகள் மருந்துத் தட்டுப்பாட்டுக்குப் பிரதான காரணியாக உள்ளன. ஆகவே இலத்திரனியல் முறைமையிலான விலைமனுக்கோரலுடனான மருந்துக் கொள்வனவை அறிமுகப்படுத்தவேண்டும். இதற்குரிய மனித மற்றும் பௌதீக வளங்களை அரசாங்கம் வழங்கவேண்டும்-என்றார். (க-இ)

## மருந்துகளுக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, ஒக்.23

மருந்துகளுக்கான விலை நிர்ணயச் சூத்திரம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, ஒவ்வொருவகை மருந்துகளுக்கும் அதிகபட்ச விலைவரம்பு நிர்ணயிக்கப்படும் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அதேவேளை சுவசெரிய அம்புலன்ஸ் சேவையின் பெயர் மற்றும் நிறத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ச-இ)

## அவசர உதவிக்கு அலைபேசி எண்!

கொழும்பு, ஒக்.23

சீரற்ற வானிலை காரணமாக ஏற்படும் சுகாதார அவசர நிலை மற்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. சுகாதார அவசரநிலை மற்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படுபவர்கள் 077 4506602 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளலாம். 24 மணித்தியாலங்களும் செயற்படும்வகையில் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## 24 மணிநேரத்தில் 6 துஷ்பிரயோகங்கள்

நாட்டில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 6 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். முதற்கட்ட விசாரணைகளின்படி, 5 சம்பவங்கள் காதல் உறவுகள் தொடர்பிலும், மற்றையது பலவந்தமாகவும் நடந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




## சுற்றுலாவிகள் 'லைசென்ஸ்' கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.23

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணத்தை 2 ஆயிரம் ரூபாவிலிருந்து 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த 'லைசென்ஸ்' வசதி எதிர்காலத்தில் வெளிநாட்டினருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது என்றும் பல ஆண்டுகளுக்குப் பிறகு நாடு திரும்பும் இலங்கையர்களும் பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துவதன்மூலம் அதைப் பெறமுடியும் என்றும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ச-இ)



நாளை

வெள்ளிக்கிழமை - ஐப்பசி 7

24.10.2025

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குனர் - இலங்கை தொலைத்தொடர்புத் திணைக்களம்)

திதி: துதியை (23.10.2025)



யாழ் காரைநகர் கருங்காலியை பிறப்பிடமாகவும், அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சரோஜினிதேவி சிவஸ்கந்தா அவர்களின் 14ம் ஆண்டு நினைவஞ்சலி.

ஏனோ தெரியவில்லை மனசு வலிக்கிறது
வானோ சொரிகின்றது கண்ணீர் மழையால்
தானாய் வரும் துன்பங்களை
தூணாய் நின்று எதிர்த்திட்ட எங்கள் தாயை
காணாத கடவுள் கவர்ந்து சென்றுவிட்டான்
மூணாகி உலகம் உடைந்துதான் போனாலும்
தேனாக நீங்கள் தந்த அன்பு
வீணாகிப் போயிடாது வீச்சாய் இருந்துவிடும்
பேனா கொண்டு நீங்கள் எழுதிவிட்டால்
பேய்கள் கூட ஓடிவிடும் பேதியிலே
தோணி பிடித்து நாம் தூரதேசம் போனாலும்
ஆணியாய் எங்கள் மனதில் அம்மாதான்
ஏணியாய் இருந்து எங்களை ஏற்றிவிட்டு
பணிதான் முடியுமுன்னர் பிணிவந்து விடவில்லை
பேணித்தான் வளர்த்தீர் பேதலிக்க விட்டு விட்டு
போய்விட்டீர் அந்த பொல்லாத கடவுளிடம்
பாழாகிப்போன நோய் வந்து தூளாக்கிப் போட்டுது உடலை
மீளாத துயரம் எங்களை தாளாமல் வாட்டுது
வாழாமல் போனீரா இல்லை வாழ்ந்து விட்டுத்தானே போனீர்
ஆளாக எங்களை ஆக்கிவிட்டு
ஆண்டவனிடம் தான் போனீரோ
தேளாய் கொட்டிக்கிடக்கும் மனதை தேற்றிட யாருமில்லை
கேளாமல் நீர் தந்த அன்பு கேட்டாலும் கிடைத்திடுமா
வீழாமல் இருக்கின்றோம் உங்கள் வரவைத்தேடி



மலர்வு 14.09.1941
உதிர்வு 28.10.2011

(CS/59704) J-1

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# நினைவலைகள்

1ம் ஆண்டு



அமரர் சிதம்பரப்பிள்ளை
நிற்சிங்கராஜா

5ம் ஆண்டு



அமரர் சிதம்பரப்பிள்ளை
தங்கம்மா

37ம் ஆண்டு



அமரர் நிற்சிங்கர்
சிதம்பரப்பிள்ளை

மாலையின் மௌனம் மிதந்த புன்னகை மழைத்துளி போல் நெஞ்சில் விழும் - நினைவு
மலர்ந்த மனத்தின் மறைந்த நிழல் மறக்க முடியாத உங்கள் அன்பின் ஒளி.
காலத்தின் கரையாத அலைகள், ஆசையின் அருவி போல் ஓடி
வானின் நட்சத்திரம் உங்களை ஏற்று வாழ்வின் வீதியில் வாசலாய் நிலைத்து நிற்கின்றீர்கள்.
சொல்லாத அன்பின் தீபம், மங்காத ஜோதி - என்றும்
நிழலாய் நிலைத்திருக்கும் நீங்கள் இல்லாவிட்டாலும் உங்கள் நினைவுகள்
எப்போதும் நம் இதயத்தில் உயிராய் மலர்ந்திருக்கும்.


மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 04 . 1954



மறைவு 12 . 10 . 2025

## யோகராசா சிறீஸ்கந்தராசா

திருகோணமலையை பிறப்பிடமாகவும் ஜேர்மனி பேர்லினை வதிவிடமாகவும் கொண்ட திரு. யோகராசா சிறீஸ்கந்தராசா அவர்கள் கடந்த (12.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகராசா - கொங்காம்பிகை தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தில்லைநாயகி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற ரதி அவர்களின் அன்பு கணவரும், துஷ்யந்தன், ஜனனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் Krematorium Ruhleben Am Hain 1, 13597 Berlin முகவரியில் நடைபெறும் என்பதைனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

122/4B பருத்தித்துறை வீதி.
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(துஷ்யந்தன்)
077 068 7363

(CS/4256) D*

# மரண அறிவித்தல்



## திருநாவுக்கரசு தனபாலசிங்கம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் புதுவீதி. கொக்குவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட திருநாவுக்கரசு தனபாலசிங்கம் அவர்கள் கடந்த 21.10.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்ஷிகா மற்றும் சுஜீவன், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம், சுந்தரலிங்கம், அருட்செல்வி, சிவலிங்கம் மற்றும் காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனஜா, தயாபரன், விஜிதா ஆகியோரின் மைத்துனரும், கஜாலினி ன் மாமனாரும், அவிஷா, விதுர்ஷன், பவிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதுயவீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்.
077 9186 303

(CS 30625) A

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் சிவபாக்கியம்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (22.10.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், கோடீஸ்வரி, கோடீஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), கௌதீஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி (கனடா), லிங்கேஸ்வரன் (ஜேர்மனி), லிங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரவியம், தவராஜா, கந்தசாமி, சிவராஜா, குணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வானந்தன், விக்கினேஸ்வரி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), செல்வா (லண்டன்), காசிவிஸ்வநாதன் (கனடா), செல்வாம்பிகை (ஜேர்மனி), விஜித்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், உசாந்தினி, செந்தில்குமரன், இளங்குமரன், ஜனனி, சகிர்த்தன், திலக்சன், திபிசன், அபினா, கரிஸ், வசிக்கா, விவேக்கா, துவாரகன், இலக்கியா, துவாரகா, ஆத்மிகா, அபிஸ், ஜெனியா, ஒலிவியா, காலஞ்சென்ற வசீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பார்க்கவி, ஆதித்தன், ஆதிரா, அர்த்தனா, அபிராம் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 25.10.1939 மறைவு 22.10.2025

சுதுமலை வடக்கு, மானிப்பாய்,
ஈஞ்சடி வைரவர் கோவிலடி.

(CS/59701) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக லோகநாதன் பதவி உயர்வு

கொழும்பு.ஒக்.23

மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக காரைநகர் களபூமியைச் சேர்ந்த தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.



சுங்க சேவையில் பதவி வழி உத்தியோகத்தர் அடையக் கூடிய ஆகக்கூடிய பதவி இதுவாகும்.

1992ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சையில் தெரிவாகி, 1993 ஆம் ஆண்டு உதவிச் சுங்க அத்தியட்சராக நியமனம் பெற்ற லோகநாதன், 2016ஆம் ஆண்டு சுங்க அத்தியட்சராகவும் 2024 ஆம் ஆண்டு சுங்கப்பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இவர், 1991ஆம் ஆண்டு விஞ்ஞானமாணி (BSC) பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலும் 2009ஆம் ஆண்டு முதுகலை மாணி(MPM) பட்டத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத் திலும் (SLIDA) பெற்றார்.

இவர் சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் சுங்க மேற்பார்வை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஆவார். (ச-இ)


## வவுனியா வடக்கு பிரதேச சபை

## 2026.01.01 முதல் 2026.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2025.10.24 தொடக்கம் 2025.11.07 ஆம் திகதி பி.ப 1.50 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2025.11.07 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2025.11.07 பிற்பகல் 02.05 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | சந்தை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 1,064,250.00 |
| 2 | நெடுங்கேணி மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 253,000.00 |
| 3 | கனகராயன்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 404,250.00 |
| 4 | கனகராயன்குளம் மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 253,550.00 |
| 5 | புளியங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 145,750.00 |
| 6 | புளியங்குளம் மீன் சந்தை | 2,000.00 | 5,000.00 | 79,200.00 |
| 7 | புளியங்குளம் மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 177,760.00 |


கேள்வி நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதிஇ இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுவதோடு எதற்கான கேள்வி விண்ணப்பம் என்பதனையும் குறிப்பிட்டு "தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
2. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் பிரதேச செயலரால் விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் அதன் பிரதி என்பனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப்பிரதிகள் மீள ஒப்படைக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு தொகையை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாக வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 2/3 தொகையினை 2026.08.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
6. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் மாதாந்த குத்தகைத் தொகையினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலும் இன்றி குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
7. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து சித்தி பெற்ற கேள்விதாரர் குறிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது கேள்வி விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். அத்துடன் எதிர்காலத்தில் அவர் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியாதவாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவார் என்பதோடு கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
9. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது ஆகும். கேள்விப்படிவங்களை தருவதற்கு முன்பும் அதற்கு பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.
11. மரக்கறிச்சந்தை மண்டபத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 3% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது அத்துடன் உற்பத்தியாளரிடமிருந்து 10% கழிவு பெறும் நடைமுறை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
12. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி, மீன் மற்றும் மரக்கறி போன்றன சுகாதாரமானதாக இருப்பதுடன் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
13. குத்தகை தாரர் கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
14. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்
15. சந்தைச்சுற்றாடலில் இருந்து 2 Km (இரண்டு கிலோ மீட்டர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறிஇ மீன்இ இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
16. உபகுத்தகைக்கு விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் குத்தகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு உப குத்தகைக்கு வழங்கியமை தெரியவரின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
17. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்துகளுக்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்துமூலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒழுகுதல் வேண்டும்.
18. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
19. கேள்வி விண்ணப்பங்களை உரிய நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கத் தவறின் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
20. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
21. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்

செல்வி திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி,
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.


## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 01 . 1972



மறைவு 21 . 10 . 2025

### தர்மசேனன் ஜெயகுமார்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட தர்மசேனன் ஜெயகுமார் கடந்த 21.10.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மசேனன் (பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் தவமலர் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசந்தி (யா/ஏழாலை இசிதோர் றோ.க.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், பிரவீனா, ஜெயந் (யா/மகாஜனாக் கல்லூரி தரம் 10, 8) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி (கொலண்ட்), கமலினி (கனடா), தர்மினி (ஜேர்மனி), சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பந்தபிள்ளையார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 4260) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 28.06.1950

இறப்பு 21.10.2025

### ரவீந்திரநாதன் புஷ்பராணி

தாவடியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரநாதன் புஷ்பராணி அவர்கள் கடந்த 21.10.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், மரியாம்பிள்ளை - பகவதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ரவீந்திரநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகமணி (அதிபர்), நடராசா (தாவடி), காலஞ்சென்ற துரைவீரசிங்கம் (தேவிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலையரசி (வாணி - பிரான்ஸ்), நவநீதன் (பிரபு-பிரான்ஸ்), கஜவதனா (பிரான்ஸ்), நக்கீரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதாகர், மெலினி, மித்திரன், சுரேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிலா, மதன், அதுனிஸ், திவ்வியா, அனித்தா, ஆதித்தியா, அதிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரூபகௌரி, தருமரூபன், ரூபமாலினி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நந்தாவில் ஒழுங்கை,
தாவடி.

தகவல்:
நடராசா (அண்ணா)
மதனராசா (மருமகன்)

(CS 30602) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறைமுக அபிவிருத்தியில் இந்தியாவின் நிபந்தனைகள் ஆராய்வு

**கொழும்பு,ஒக்.23**

**காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக இந்திய அரசு வழங்கும் 62 மில்லியன் டொலர் மானியத்தை அரசாங்கம் இன்னும் இறுதி செய்யவில்லை. கடனிலிருந்து மானியமாக மாற்ற இந்திய அரசு முன்வைத்த நிபந்தனைகள் குறித்து இன்னும் பேச்சுகள் நடந்து வருவதாக துறைமுக அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்த துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து துணை அமைச்சர் ஜனிதா ருவான் கொடித்துவக்கு இதுதொடர்பில் தெரிவிக்கையில்,

வடக்கு துறைமுகத்தின் மேம்பாட்டுக்காக இந்தியா 62 மில்லியன் டொலருக்குமேல் வழங்கியிருந்தாலும், அந்தத்தொகை தற்போது கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனை மானியமாக வழங்க இந்திய அரசு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

அந்த நிபந்தனைகள் இன்னும் கலந்துரையாடப்பட்டுவருகின்றன.

இந்தத் திட்டத்தைத் தொடரலாமா வேண்டாமா என்பது குறித்து அரசாங்கம் இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. ஒரு துறைமுகம் நிறுவப்படும்போது, அதன் சமூகப்பொருளாதார தாக்கத்தை நாம் கவனிக்க வேண்டும்.

அது உறுதி செய்யப்பட்டவுடன், தேவையான பேச்சுகளைத் தொடங்கி அதற்கேற்ப முன்னேறுவோம்- என்றார். (ச-இ)



# வெள்ளத்தில் மிதக்கும் பரு. மரக்கறிச் சந்தை

## வியாபாரிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

தொடர் மழையால், பருத்தித்துறை மரக்கறிச் சந்தைத் தொகுதி வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளது. இதனால் வாழைப்பழ வியாபாரிகள் உள்ளிட்ட வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மரக்கறிச் சந்தை வளாகத்துக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

சந்தைத் தொகுதியின் தரைத் தளமும் வீதியும் ஒரே மட்டத்தில் இருப்பதால், வீதியூடாகப் பாய்ந்தோடும் வெள்ளமும் சந்தைத்தொகுதிக்குள்ளும் உட்புகுந்துள்ளது.

அத்துடன் சந்தைத்தொகுதி மேற்கூரை மூலம் கீழிறங்கும் மழைநீரும் சேர்ந்து சந்தைத்தொகுதி வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. இதனால் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். மழை தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருப்பதால், வியாபார நடவடிக்கைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் மரக்கறி சந்தை இயங்கிவந்தநிலையில், தற்போதைய இடத்தில் புதிய சந்தைத்தொகுதியை அமைத்து இடமாற்றுவதற்கு நகரசபை செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கைதடி சமுர்த்தி வங்கியில் சிறுவர் கணக்கு ஆரம்பித்தவர்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-25,9)

# கனகம்புளியடி - யாக்கரை வீதி சீரமைப்புக்காக தற்காலிக மூடல்

யாழ்ப்பாணம், ஒக். 23

சாவகச்சேரி - புலோலி வீதி - கனகம்புளியடியில் இருந்து யாக்கரை வரையான வீதியில் உள்ள 142 ஆம் இலக்க பாலத்தின் தற்காலிக வீதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக அவ்வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை முதல் குறித்த வீதி தற்காலிகமாக மூடப்படவுள்ளது என்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்காக மாற்று வீதியைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2026ஆம் ஆண்டிற்கு (01.01.2026-31.12.2026) வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 23.10.2025 - 30.10.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 30.10.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 30.10.2025 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்வி விண்ணப்பபடிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, இரு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையிலும் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30.10.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 14,060.00 |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | 9,282,320.00 |
| 3 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | - | 1,000.00 | 25,000.00 | 1,272,150.00 |
| 4 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 60,000.00 | 2,902,680.00 |
| 5 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | 1,119,200.00 |
| 6 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | 229,190.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 7 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 100,000.00 | 4,653,100.00 |
| 8 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 45,000.00 | 2,080,490.00 |
| 9 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 15,000.00 | 647,700.00 |
| 10 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 3,250.00 | 1,000.00 | 5,000.00 | 56,430.00 |
| | கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 11 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 514,800.00 |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 12 | உரும்பிராய் மத்திய சந்தை | - | 1,000.00 | 40,000.00 | 1,792,890.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2025.10.05 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
2025.10.23

# நிறுவை, அளவைகள் முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம்,ஒக்.23

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் நிறுத்தல் மற்றும் அளவைகள் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு, முத்திரை இடும் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன.

சந்தைகள், இறைச்சிக்கடைகள், பால் சேகரிப்பு நிலையங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிலையங்கள், பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், தபால் நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், வாகன சுத்திகரிப்பு நிலையங்கள், பண்ணைகள், மீன்வாடிகள், பொதிகள் சேவைகள், வெதுப்பகங்கள், தையலகங்கள், பொதி செய்து விற்பனை செய்வோர் உட்பட அனைத்து வகையான வியாபார நிலையங்களிலும் பயன்படுத்தப்படும் சகல படிக்கற்கள், சகல வகையான தராசுகள், அளவைகள், மீற்றர் கோல்கள் என்பன பரிசோதிக்கப்பட்டு முத்திரை பதித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

பருத்தித்துறை நவீன சந்தைக்கட்டடத்தொகுதியின் மேல்மாடியில் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றுத் தொடர்ந்து, எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை முத்திரையிடல் இடம்பெறும் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் அறிவித்துள்ளார். (க-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 நாள்...

மாற்றப்பட்டது. நேற்றுமுன்தினம் இரவு சிசு உயிரிழந்துள்ளது.
இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## பயங்கரவாதத்...

பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த செப்ரெம்பர் மாதமளவில் முழுமையாக நீக்கப்படும் என்று முன்னதாக நீதி அமைச்சர் கூறியிருந்த நிலையில் தற்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
தனியார் தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். அதைத் தக்கவைக்கும் எண்ணம் இல்லை. ஆனால் சட்டம் ஒன்றை இரத்துச் செய்யும்போது அதை விஞ்ஞானபூர்வமாக மேற்கொள்ளவேண்டும்.
பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய சட்டவரைவைத் தயாரிக்கும் குழு எதிர்வரும் 28ஆம் திகதி கூடவுள்ளது. அன்று சட்டவரைவு இறுதிப்படுத்தப்பட்டுக் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். அதன்பின்னர் பொதுமக்கள் கருத்துக்களைப் பெறுவதற்காக சமூகத்தில் ஒரு மாதத்துக்கு அந்தச் சட்டவரைவு விடப்படும்.
எதிர்வரும் 28ஆம் திகதி குழு அறிக்கையை வழங்கினால் சட்டவரைவு தயார் என்ற அறிவிப்பை எம்மால் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல்வாரத்தில் வெளியிடமுடியும். நாட்டின் பாதுகாப்புக் கருதி புதிய சட்டம் வரும் வரையில் இருக்கும் சட்டத்தைப் பயன்படுத்த நேரிடும் - என்றார். (அ-எ-44)

## நுரையீரல்...

சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் சிறுமி உயிரிழந்தார். வலிப்பு மற்றும் நுரையீரல் தொற்றுக் காரணமாகவே சிறுமி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## கட்டுப்பாடு...

களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில், பெரியகட்டுப் பகுதியில் இந்த விபத்து நடந்துள்ளது. சொகுசு பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.
பஸ்ஸில் பயணித்த 10 பேர் காயமடைந்த நிலையில் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் மன்னார், முருங்கனைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-110)

## போதை...

இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதைத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து 110 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## வன்முறையைத்...

அந்த வீட்டில் இளைஞன் இல்லாத நிலையில், சந்தேகத்துக்கு இடமான முறையில் அங்கு தங்கிருந்த இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த வீட்டிலிருந்த இரு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் தனது பிறந்தநாளுக்காகப் பெருமளவான இளைஞர்களை ஒன்றுகூட்டி பெருமெடுப்பில் கொண்டாட்டங்களை நடத்தியிருந்தார். அவை தொடர்பான காணொலிகள் ரிக்ரொக் உட்பட சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டிருந்தன. அந்தக் காட்சிகள் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.
சட்டவிரோதமான முறையில் இளைஞர்களை ஒன்றுகூட்டியமை, இளைஞர்களிடையே வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்பட்டமை, சட்டவிரோத சொத்துக்குவிப்பு ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அந்த இளைஞரின் வீட்டில் சோதனை நடத்த யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அனுமதி கோரியிருந்தனர்.
பொலிஸாரின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியதை அடுத்து, நேற்று அதிகாலை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒத்துழைப்புடன், யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு இளைஞனின் வீட்டை முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்தியது.
தேடுதல் நடத்தப்பட்டபோது அந்த இளைஞன் வீட்டில் இருக்கவில்லை. அந்த வீட்டில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தங்கியிருந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், பிறந்தநாளைக் கொண்டாடிய இளைஞரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
தற்போது தேடப்படும் இளைஞர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில், இடையூறு ஏற்படுத்தி பிறந்தநாளைக் கொண்டாடியமைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தார். அப்போது 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் வந்த 150க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றுகூடி பிறந்தநாள் கேக்வெட்டியதுடன், பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தனர். (அ-எ-26)

## மாற்றுத்திறனாளி...

இவருக்கு கை, கால்கள் இயங்காத நிலையில், தொலைக்காட்சி பார்ப்பதற்காக வாயால் "பிளக்கை" பொருத்தமுயன்றபோது மின்சாரம் தாக்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## வெலிகம சபையின்...

குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தால் பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. இந்த நாட்டில் பாதாளக் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் பிளவுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றுக்கிடையில் மோதல் உள்ளது. ஆயுதங்களும் உள்ளன. இன்று (நேற்று) இடம்பெற்ற சம்பவமும் பாதாளக்குழுவுடன் தொடர்புபட்டதாகும்.
அவர் மக்கள் பிரதிநிதி என்றபோதும் பாதாளக்குழுவுடன் தொடர்புபட்டவர். அவருக்கு எதிராக ஆறு வழக்குகள் உள்ளன. சிறைத் தண்டனையைக்கூட எதிர்கொண்டவர். இவர் தொடர்பில்விரிவான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. கொலைகளை நாம் அனுமதிப்பதில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெற்றுவருகிறது - என்றார். (அ-எ-44)

## வெலிகம துப்பாக்கிச்...

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வெலிகம பிரதேசசபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர தனது அலுவலகத்தில் பொது மக்கள் தின நடவடிக்கைகளை முன்னெடுக்கையில் அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.
தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த அவர் பின்னர் உயிரிழந்துள்ளார். தவிசாளர் என்பவர் மக்கள் பிரதிநிதியொருவராவார். மக்கள் பிரதிநிதிகளால் கூட பொதுமக்கள் தின நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாவிட்டால், இது தேசிய பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையொன்றாக அமைந்து காணப்படுகின்றது - என்றார். (அ-எ-44)

## தவிசாளர்...

சந்திப்பில் நேற்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பங்கேற்றிருந்தார்.
வெலிகம சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், வெலிகம பிரதேசசபையில் நடந்த கொலைச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் 4 குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. விரைவில் இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்கள் கிடைக்கும் என்று நம்புகின்றோம். பொதுமக்களுக்கு ஏதேனும் தகவல் தெரிந்தால் அவற்றை எமக்குத் தெரியப்படுத்தலாம் - என்றார். (அ-எ-44)

## வெலிகம சபைத்...

அழைக்கப்படுகின்றார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடந்துள்ளது. பொதுமக்கள் சந்திப்பு தினமான நேற்று பிரதேசசபைக்குள் நுழைந்த ஒருவர் தவிசாளரின் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.
துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தவிசாளரை அங்கிருந்தவர்கள் மாத்தறை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோதும் அவர் உயிரிழந்துள்ளார். நாட்டில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 101 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அவற்றில் 51 பேர் உயிரிழந்துள்ளனர், 56 பேர் காயமடைந்துள்ளனர். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 06 . 1940

மறைவு 20 . 10 . 2025

## சுவாமிநாதன் பாலேந்திரன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் பாலேந்திரன் அவர்கள் கடந்த (20.10.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - ஜெயமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோகராதேவியின் அன்புக் கணவரும், சாந்தினி (பிரான்ஸ்), சத்தியன் (ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ்), ரமணன் (ஸ்ரீலங்கா ரெலிகொம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளன் (பிரான்ஸ்), பூரணி (ஆசிரியை யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), அனித்தா (ஆசிரியை, கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், குலேந்திரன், குணேஸ்வரி, விஜேந்திரன் மற்றும் இராஜேஸ்வரி (கொழும்பு), நேசேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், கணேசலிங்கம், சுந்தரலிங்கம், செல்வலக்ஷ்மி, யோகலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், லக்ஷ்மன், பிரணவி, பிரகாஷன், கேஷாயினி, கேஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"அன்னை இல்லம்"
G.P.S வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்
077 386 3753, 071 855 5105

# நயினாதீவில் குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு நயினாதீவு மத்திய விளையாட்டுக்கழகம் இரண்டாவது தடவையாக நடத்தும் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நயினாதீவுப் பிரதேச மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

## வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு முன்னாள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 882 8694
077 411 8851

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**


* 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
* 16 அடி பாதையுடன் நிலப்பரப்பு
* அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் 100 m தூரம்
* பருத்தித்துறை பஸ் நிலையம் 1 1/2 km
* தெல்லிப்பளை பஸ் நிலையம் 1 1/2 km
* மேட்டு நிலம், நண்ணீர் ஊற்று, குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
* 1 பரப்பின் விலை வீதி முகப்புடன் 10 லட்சம் ரூபாய்
* இரண்டாம் துண்டு 7 லட்சம் ரூபாய்
* 3 ம் துண்டு 5 லட்சம் ரூபாய்

பார்வையிடும் நேரம் :
காலை 08 மணிமுதல் மாலை 06 மணிவரை

தொடர்பு: 076 8602 770
076 9878 617

(CS 4258) A

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 05 . 1944

மறைவு 20 . 10 . 2025

## ஐயாத்துரை கணேசலிங்கம்

(ஆனந்தி V.A.K)

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கணேசலிங்கம் கடந்த (20.10.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்தாபரணம் தம்பதியரின் மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், தர்சிகா, துஷாந்தன் (ஜேர்மனி), சுஜீலன் (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2025) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

தகவல்
குடும்பத்தினர்

(CS 59697) A

# 31ம் நாள் நினைவலைகள்



மண் மகிழ 20 . 09 . 1948

மனம் நெகிழ 23 . 09 . 2025

## அமரர் சண்முகலிங்கம் சந்திராதேவி

இதயத்தை உறைய வைத்து நிசப்தமானதே நின் மறைவு...
அதிர்ந்து மீளமுடியா துயரத்தில் ஆழ்த்தியதே நின் நினைவு.
மூவரையும் வயிற்றில் நீயே சுமந்தாய்!
யாவரையும் பாசத்தில் வாழ்ந்திடச் செய்தாய்!

எம் வீட்டு குத்துவிளக்காய் இருந்தனை நீயே.
சுடர் இன்றி வெறுமையாய் இப்போது தாயே!
விதி முடிந்தது என ஓடி மறைந்தாயோ?
எமை விட்டு விலகிச் சென்றனை ஏனோ? வழிகாட்டும் ஒளியே...!

அப்பாவுடன் சேர்ந்து நீயும் அற்ற வாழ்க்கையின்
அந்த நிசப்தம் ஆழ்த்துமே அது துயரம்.
விதைத்தவனே அறுவடை செய்துவிட்டான்... ஆனால்
யாம் என் செய்வோம் தாயே?

உன் நினைவுகளின் நிழலில் நாம் வாழ கற்றுக்கொள்கிறோம்...

"இரத்தின வாசம்"
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்

(CS/59690) J-1

உங்கள் நினைவலைகளுடன்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.